# 2017 - 2018

ஆகஸ்டு 08 ஆம் தேதி 2017-2018ஆம் கல்வியாண்டின் தமிழ்மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. கோவை நன்நெறிக்கழகத்துடன் இணைந்து நடத்திய இவ்விழாவில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் க.முருகேசன்** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு **“வையத்தலைமைகொள்”** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை** முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு கலை மற்றும் இலக்கியப்போட்டிகள் நடத்தப்பட்டு தமிழ் மன்றத் தொடக்கவிழாவில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2017 அக்டோபர் 12 அன்று கோவை கம்பன் கழகத்தினரின் **கம்பராமாயணம் சுழலும் சொல்லரங்கம்** நடைபெற்றது. இதில் மாணவி **வித்யாமோகன்தாஸ்** (பி.காம்.சி.ஏ. மூன்றாமாண்டு) முதல் பரிசினைப் பெற்றார்.

2017 நவம்பர் 4 அன்று இந்தியன் வங்கி நடத்திய **“ஊழலற்ற இந்தியாவை உருவாக்குவோம்”** என்ற மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டியில் மாணவன் **ஞா.சந்தோஸ்குமார்** (பி.பி.ஏ. முதலாமாண்டு) முதல் பரிசினை வென்றார்.

2017 டிசம்பர் 11 அன்று **பாரதியார் பிறந்த தின விழா**வினையொட்டி கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் மாணவர் **ம.கோ.யோகேந்திர நிருருதீஸ்** (பி.எஸ்.சி. கணிதம் இரண்டாமாண்டு) முதல் பரிசினை வென்று **“இளம்பாரதி”** என்ற பட்டத்தினைப் பெற்றார்.

2017 டிசம்பர் 11 அன்று பாரதியார் பிறந்ததின விழாவினையொட்டி கோவை பண்பலை **ரேடியோ சிட்டி (91.1)** வானொலியில் **“இன்றைய இளைஞர்களின் பார்வையில் பாரதி”** என்ற தலைப்பில் தமிழ் மன்ற மாணவர்கள் தங்கள்

கருத்துக்களை வழங்கினர். மேலும் தமிழ்த்துறைப் பேராசிரியர் **முனைவர் ப.ஜெயபால்** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு **“பாரதியின் அன்பன்”** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.







